DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.100/2021**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பிரகாஷ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | தர்மலிங்கம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் பட்டவர்த்தி கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும் அவர் எனது பெரியண்ணன் நண்பர்ஆவார். 25.09.2017 ம் தேதி காலை 10.00 மணிக்கு செல்லாண்டியம்மன் கோவிலுக்கு எனது அண்ணன் இருசக்கர வாகனமான Fashion Pro TN 47 AU 9156 என்ற வாகனம் மதுக்கரை செல்லாண்டியம்மன் கோவில் அருகில் நிறுத்திவிட்டு சாமிகும்பிட்டு விட்டு வந்து இரண்டு மணிநேரம் கழித்து வந்து பார்த்தபோது எனது அண்ணன் இருசக்கர வாகனம் காணவில்லை.

2. தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. 3 நாட்கள் கழித்து எனது அண்ணன் புகார் கொடுத்தான். போலிசார் கண்டுபிடித்தாக சொன்னார்கள் காவல்நிலையத்திற்கு சென்று வாகனத்தை பார்த்தோம் ஆஜர் எதிரி எடுத்ததாக போலிசார் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் பட்டவர்த்தி கிராமத்தில் உள்ளேன். நான் குளித்தலையில் டிரைவராக 10 வருடமாக வேலை பார்க்கிறேன். எ னது அண்ணன் பெயர் பிரேம்நாத். கரூரில் உள்ளார். யார்யார் கோவிலுக்கு சென்றோம் என்றால் நான், எனது அண்ணன் பிரபாகரன் அப்பா தர்மலிங்கம், அண்ணன் தியாகராஜன் எனது அம்மா சரஷ்வதி, ஆகியோர்களுடன் கோவிலுக்குச் சென்றோம். Fashion Pro TN 47 AU 9156 என்ற வாகனத்தில் எனது அண்ணன் கோவிலுக்கு வந்தான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான. சம்பவம் நடந்த உடன் புகார் கொடுத்திருக்கலாம் என்றால் சரிதான்.

2. எனது அண்ணன் எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் 28 ஆக இருக்கலாம். எனது அண்ணன் வண்டி காணாமல் போகவில்லை என்றாலும் எதிரி எனது அண்ணன் நண்பர் என்பதால் அவர்மீது புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எதிரியின் பெயர் குறிப்பிட்டு புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. அ.சா.1 எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 15:13:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.